**இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல. 2275-எஸ்ஆர்ஐ) - 2013**

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2007 யூன் 06 ஆம் திகதிய 2275 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஓஎஸ்எல்) அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் பிரதான நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2003 ஆகஸ்ட் 18 இல் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு உள்ளடங்கலாக ஐக்கிய அமெரிக்க டொலர் 85.6 மில்லியன் தொகையான 1993 எஸ்ஆர்ஐ - (எஸ்எவ்) ஆம் இலக்க கடனை அனுமதித்திருந்தது. வட மத்திய மாகாணத்தின் 5 நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் உள்ள 969,000 மக்களுக்கு பாதுகாப்பான நீரினையும், 171,500 மக்களுக்கு சுகாதார வசதிகளையும் வழங்குவதுடன் நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்தின் இயலளவை உயர்த்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அதனது மூல மதிப்பீட்டிலிருந்து சாத்தியமற்ற மொத்த கிரய மதிப்பீடு மற்றும் விலைத்தளம்பல் என்பவற்றின் விளைவாக அம்பலாந்தோட்டையில் வலவ ஆற்றிற்கு குறுக்கே உவர் நீர் தடுப்புச் சுவரின் நிர்மாணம் மற்றும் பூர்தியாக்கலை செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களிலிருந்து (ஓசீஆர்) ஒரு குறைநிரப்புக் கடன் (கடன் இல. 2275 - எஸ்ஆர்ஐ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 19.1 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 13.5 மில்லியன் அல்லது 70.6 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தால் (ஜீஓஎஸ்எல்) ஐ.அ.டொலர் 5.6 மில்லியன் அல்லது 29.4 சதவீதம் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. கிரய அதிகரிப்பின் விளைவாக செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் யூ.எஸ்.டொலர் 21.5 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பும் யூ.எஸ்.டொலர் 8 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2010 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர், இக்காலப்பகுதி 2014 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கடப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 218,410,808 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,184,123,100 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 112,864,257 | 134,289,016 | 1,442,110,987 |
| உபகரணங்களும் பொருட்களும் | 105,545,551 | 178,777,855 | 690,436,598 |
| வட்டிக் கட்டணங்கள் (துணைநிலை) | - | 11,064,422 | 51,575,515 |
| மொத்தம் | 218,409,808 | 324,131,293 | 2,184,123,100 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கீழான உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதியத்தின் (சீஐஜீஎவ்எல்) வரியாக ஒப்பந்த கொடுப்பனவுகளின் ஒரு சதவீதம் கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டம் இவ்வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் உபகரணங்களிற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 268 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கின் பிரகாரம் செலுத்தப்பட்ட உண்மையான தொகை ரூபா 236 மில்லியன் ஆகும். எனவே, காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட சிவில் வேலைகள், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றிற்காக கொடுப்பனவு ரூபா 32 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போதான நிதிகளின் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ஐ.அ.டொலர் (மிலலியன்) | ரூபா (மில்லியன்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 12.80 | 1,442.66 | 124.50 | 123.82 | 11.4 | 1,303.48 |
| இலங்கை அரசாங்கம் | 8.00 | 902.30 | 157.32 | 112.37 | 7.0 | 833.18 |
| மொத்தம் | 20.80 | 2,344.96 | 281.82 | 236.19* | 18.4 | 2,136.66* |

* அட்டுறு செலவினத்தின் தாக்கம் காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து மேற்குறிப்பிட்ட தொகைகள் வித்தியாசப்படுகின்றன

### 6.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் இரண்டு ஒப்பந்த உடன்படிக்கைகளின் கீழான வேலைகள் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அம்பலாந்தோட்டையில் வலவ ஆற்றுக்கு குறுக்கே நுழைந்த உவர் நீர் தடுப்புச் சுவரின் நிர்மாண ஒப்பந்தம், பூர்த்தியாக்கல் மற்றும் தரகு என்பன ரூபா 1,209,424,076 செலவு செய்ததன் மூலம் பூர்த்தியாக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலைமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கையேற்பு சான்றிதழ் திகதியிலிருந்து 03 மாதங்களிற்குள் திருத்தப்பட வேண்டியிருந்த 2013 நவம்பர் 25 இல் வழங்கப்பட்ட கையேற்பு சான்றிதழில் சுட்டிக்காட்டப்பட்ட முப்பத்தியிரண்டு குறைபாடுகள் 2014 யூலை 31 வரையும் திருத்தப்பட்டிருக்கவில்லை.